**கவனிக்க** .-*27.06.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1870 - 2014 ජූලි මස 04 වැනි සිකුරාදා - 2014.07.04

*1870 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நாயகத்தின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 558 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 560 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, யூலை மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# அரசாங்க அறிவித்தல்கள்

## இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் (திருத்தச்) சட்டத்தின் 10(3) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

**விலக்களிப்பு சான்று வழங்குதல்**

*இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, திருத்தப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் (திருத்தச்) சட்டத்தின் 10(2) பிரிவிற்கு அமைய, வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும் பிரகாரம் கீழ்வரும் தரப்பிற்கு மின் விநியோகத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை பெறுவதிலிருந்து விலக்களித்து, விலக்களிப்பு சான்றிதழினை இத்தால் வழங்குகின்றது.*

| சான்றிதழ் எண் | தரப்பு | காலவரை | |
|---|---|---|---|
| | | முதல் | வரை |
| EL/EX-D/14/05 | அட்லான்டிஸ் டெவலப்மட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2014.06.30 | 2019.06.29 |

தலைவர்,
இலங்கைப் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு.

7-28

---

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

*2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிலஅளவைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலஅளவைச் சபைக்கு உறுப்பினர்களை நியமித்தல்*

*2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 27(அ) ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் தமக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு 1859 ஆம் இலக்க 2014.04.17 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் வெளியான அறிவித்தல்கள் 2014.05.30 ஆந் திகதி முதல் செயல்வலுப் பெறும் வகையில் பின்வருமாறு இத்தால் திருத்தப்பட்டுள்ளது.*

(அ) பதவி வழி உறுப்பினர்கள்:-

| | | |
|---|---|---|
| 1. பனிக் முதியன்செலாகே பாலித உதயகாந்த - நில அளவையாளர் நாயகம் | தலைவர் - | நிலஅளவையாளர் நாயகம் பதவியில் இருக்கும் வரை |
| 2. சங்கக்கார முதியன்செலாகே பியன்த பத்மகுமார சங்கக்கார - மேலதிக நில அளவையாளர் நாயகம் | உபதலைவர் - | மேலதிக நிலஅளவையாளர் நாயகம் பதவியில் இருக்கும் வரை |

ஜனக பண்டார தென்னகோன்,
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2014, யூன் 06.

7-170

---

## காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 120) கீழான அறிவித்தல்

*கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின்கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.*

*2. 2014.07.04 ஆந் திகதி தொடக்கம் 2014.07.18 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு காலி காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.*

*3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக, பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட*

வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பான முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு, எழுத்துமூலம் 2014.07.25 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகளின் விபரங்கள் | காணியின் விபரங்கள் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள் |
| காலி மாவட்டத்தின் காலி காணிப் பதிவகத்தின் C என்னும் பிரிவில் 678 ஆம் புத்தகத் தில் 103 ஆம் ஏடு. | தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில், வெல்லபடபற்று இல் ஹிக்கடுவேயில் அமைந்துள்ள "அம்பலமேவத்த அல்லது வலவ்வே வத்த" என்னும் சதுப்பு நிலத்திற்கு திரு. எஸ். வருசவிதான உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் மூலம் 1950.01.09 மற்றும் 13 ஆந் திகதிகளில் அளவிடப்பட்ட இலக்கம் 2130B என்னும் அளவிடை பிரகாரம் லொட் 13 இற்கான எல்லைகள் :-<br>வடக்கு : இந்த இடத்தின் லொட் 10 ;<br>கிழக்கு : இந்த இடத்தின் லொட் 14 மற்றும் லொட் 15 ;<br>தெற்கு : ஹிக்கடுவ பத்தேகம பிரதான வீதி;<br>மேற்கு : இந்த இடத்தின் லொட் 12 மற்றும் லொட் 11.<br>விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 24.3பே. | 1. எச். ஈ. வீரசூரிய பி. நொ ஆல் சான்றுப் படுத்தப்பட்ட 1995.06.18 ஆந் திகதிய 3475 ஆம் இலக்க நன்கொடை உறுதி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : பி.நொ./11/2/35/13/2008/ஏடு. தயா.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

7-113

---

## 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டம்

1 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டத்தின் II ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரான சந்திரசிறி கஜதீர ஆகிய நான் இக்கட்டளைகளின் மூலம் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் யாவும் இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நீதாசன வலயங்கள் தொடர்பில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமோ அத்திகதியை 2013, திசெம்பர் 1 ஆந் திகதியன்று நியமிக்கின்றேன்.

சந்திரசிறி கஜதீர,
புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள்,
மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2014, மே 29.

**அட்டவணை**

1. மஹர நீதாசன வலயம்
2. உடுகம நீதாசன வலயம்
3. அங்குனுகொலபலஸ்ஸ நீதாசன வலயம்
4. தெய்யந்தர நீதாசன வலயம்
5. பொல்கஹவெல நீதாசன வலயம்
6. நாவுல நீதாசன வலயம்
7. வலபன நீதாசன வலயம்
8. வெல்லவாய நீதாசன வலயம்
9. பிபில நீதாசன வலயம்
10. வாழைச்சேனை நீதாசன வலயம்
11. தெகியத்தகண்டிய நீதாசன வலயம்
12. முல்லைத்தீவு நீதாசன வலயம்
13. கிளிநொச்சி நீதாசன வலயம்
14. நிகவெரட்டிய நீதாசன வலயம்
15. ஹெட்டிபொல நீதாசன வலயம்
16. ஹிங்குராங்கொட நீதாசன வலயம்
17. மஹியங்கனை நீதாசன வலயம்
18. சம்மாந்துறை நீதாசன வலயம்
19. பொத்துவில் நீதாசன வலயம்
20. களுவாஞ்சிக்குடி நீதாசன வலயம்

7-33

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## இ. அ. நி. கூ. வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2014, மாச்சு 19 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-

"வவுனியா, RTY ஸ்டேஷன் வியூ. 40/1 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த குலேந்திரன் சஜேந்திர மற்றும் தயாலினி சஜேந்திர என்போர், முன்னர் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எனவறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் வவுனியாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ரீ. அன்டன் புனிதநாயகம் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, பெப்புருவரி 6 ஆந் திகதிய, 1960 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராத லாலும்,

2014, சனவரி 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக எண்பத்திரண்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து நாநூற்று அறுபத்தெட்டு ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 82,37,468.92) கொண்ட தொகையும், 2014, பெப்புருவரி 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை அறுபத்துமூன்று இலட்சத்து எண்பத்தாறாயிரத்து இருநூற்று அறுபத்தொன்பது ரூபா தொண்ணூற்று ஏழு சதம் (ரூ. 63,86,269.97) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும், சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டு சதவீத (8.0%) வட்டியும், சொல்லப்பட்ட குலேந்திரன் சஜேந்திர மற்றும் தயாலினி சஜேந்திர என்போரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினா லும் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 1960 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அதன் மீதுள்ள கட்டிடங்களையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து எண்பத்திரண்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து நாநூற்று அறுபத்தெட்டு ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 82,37,468.92) கொண்ட தொகையையும், 2014, பெப்புருவரி 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை அறுபத்துமூன்று இலட்சத்து எண்பத்தாறாயிரத்து இருநூற்று அறுபத்தொன்பது ரூபா தொண்ணூற்று ஏழு சதம் (ரூ. 63,86,269.97) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும், சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டு சதவீத (8.0%) வட்டியையும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக குலேந்திரன் சஜேந்திர மற்றும் தயாலினி சஜேந்திர என்போரினால் மேற்கூறப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக் கப்பட்ட சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.".

### 1960 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வட மாகாணம், வவுனியா மாவட்டம், வவுனியா தெற்கு, வவுனியா கிழக்குமூலை தெற்கு நகர சபை எல்லைகளினுள் வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ளதும், பரப்பளவில் சைபர் தசம் ஒன்று ஒன்று ஏழு ஒன்று ஹெக்டேயர்கள் (0.1171 ஹெக்.) கொண்டுள்ளதும், உ. நி. கே. சுபாஸ் சந்திரபோஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000.03.18 ஆந் திகதிய 20220 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 05 எனக் குறித்துக் காட்டப்பட்டதும், "பாழையடிவளவு" எனவழைக்கப்படுவதுமான காணியின் பிரிக்கப்பட்ட பாகமும், பரப்பளவில் சைபர் தசம் சைபர் ஒன்று மூன்று இரண்டு ஆறு ஹெக்டேயர்களை (0.01326 ஹெக்.) கொண்டுள்ளதும், உ. நி. கே. கணபதிப்பிள்ளை என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1994.10.10 ஆந் திகதிய 9426 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 5 எனக் குறித்துக் காட்டப்பட்டதும், "பாழையடிவளவு" எனவழைக்கப்படுவதுமான இன்னுமொரு பிரிக்கப்படாத 1/2 பங்குக் காணித்துண்டம், இரு காணித்துண்டுகளும் ஒரு காணியாகச் சேர்க்கப்பட்டு, பரப்பளவில் சைபர் தசம் ஒன்று ஒன்று ஏழு சைபர் ஹெக்டேயர்களை (0.1170 ஹெக்.) கொண்டுள்ள, உ. நி. எஸ். ரவீந்திரநாயகம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.05.05 ஆந் திகதிய 29482 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 மற்றும் 2 எனக் குறித்துக் காட்டப்பட்டது.

இதிலிருந்து பரப்பளவில் சைபர் தசம் சைபர் எட்டு இரண்டு எட்டு ஹெக்டேயர்களை (0.0828 ஹெக்.) அல்லது முப்பத்திரண்டு தசம் ஏழு மூன்று பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 32.73பே.) கொண்டுள்ளதும், பின்வரும் எல்லைகளையுடையதும், உ. நி. எஸ். ரீவீந்திரநாயகம் என்பவரினால் தயாரிக்கப்பட்டதும் 2011.05.05 ஆந் திகதிய 29482 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 02 எனக் குறித்துக்காட்டப்பட்டதுமான காணியின் பிரிக்கப்பட்ட பாகம் - வடக்கு: இதன் காணித்துண்டம் 01 உம், கே. ரீ. தெய்வேந்திரனின் ஆதனமும் ; கிழக்கு : கே. ரீ. தெய்வேந்திரனின் ஆதனமும் அணைக்கட்டு மற்றும் பாதை நெடுகிலுமான ஒதுக்கிமும் ; தெற்கு : அணைக்கட்டு மற்றும் பாதை நெடுகிலுமான ஒதுக்கிடமும் கே. டீ.

குணரட்னத்தின் ஆதனமும் ; மேற்கு : கே. டீ. குணரட்னத்தின் ஆதனம். சொல்லப்பட்ட எல்லைகளினுள் முழுமையும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஏ. ஆர். பர்னாந்து,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

6-40

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394 (3) ஆம் பிரிவின் கீழான "திக்வெல்ல பெஷன் (பிறைவெட்) லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2011.11.01 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "திக்வெல்ல பெஷன் (பிறைவெட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

அவ்வாறு இல்லையெனில் அதற்கான தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "திக்வெல்ல பெஷன் (பிறைவெட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி (பணிகளை மேற்கொள்ளல்) தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்சன் சிறிவர்தன,
(பணிகளை மேற்கொள்ளல்),
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 82214
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2014, யூன் 07.

7-53

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394 (3) ஆம் பிரிவின் கீழான "ஷைனிங் வீல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2008.02.11 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ஷைனிங் வீல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற் கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

அவ்வாறு இல்லையெனில் அதற்கான தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "ஷைனிங் வீல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தி லுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி (பணிகளை மேற்கொள்ளல்) தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்சன் சிறிவர்தன,
(பணிகளை மேற்கொள்ளல்),
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 63009
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2014, யூன் 07.

7-56

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394 (3) ஆம் பிரிவின் கீழான "கோல்டன் ஓவர்சீஸ் கன்சல்டன்சி சர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2011.11.03 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "கோல்டன் ஓவர்சீஸ் கன்சல்டன்சி சர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற் கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

அவ்வாறு இல்லையெனில் அதற்கான தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "கோல்டன் ஓவர்சீஸ் கன்சல்டன்சி சர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி (பணிகளை மேற்கொள்ளல்) தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்சன் சிறிவர்தன,
(பணிகளை மேற்கொள்ளல்),
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 82284
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2014, யூன் 07.

7-54

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

394 (3) ஆம் பிரிவின் கீழான "சீகொம் புறொடக்ட்ஸ் இன்டர்நெஷனல் (பீவீடீ) எல்டீடி" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2012.12.11 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "சீகொம் புறொடக்ட்ஸ் இன்டர்நெஷனல் (பீவீடீ) எல்டீடி" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற் கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

அவ்வாறு இல்லையெனில் அதற்கான தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "சீகொம் புறொடக்ட்ஸ் இன்டர்நெஷனல் (பீவீடீ) எல்டீடி" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி (பணிகளை மேற்கொள்ளல்) தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்சன் சிறிவர்தன,
(பணிகளை மேற்கொள்ளல்),
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 89821
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2014, யூன் 07.

7-55

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

394 (3) ஆம் பிரிவின் கீழான "விஜே என்ட் விஜே (பீவீடீ) எல்டீடி" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2011.02.10 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "விஜே என்ட் விஜே (பீவீடீ) எல்டீடி" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற் கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

அவ்வாறு இல்லையெனில், அதற்கான தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "விஜே என்ட் விஜே (பீவீடீ) எல்டீடி" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி (பணிகளை மேற்கொள்ளல்) தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்சன் சிறிவர்தன,
(பணிகளை மேற்கொள்ளல்),
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 77120
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2014, யூன் 07.

7-52

---

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் (PQ 116) பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 932080 - மக் குண சேகர கிரியேசன்ஸ் (பிறைவேட்) லமிட்டெட்

2013.10.01 ஆந் திகதியன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டமொன்றில் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி பணிப் பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றிய தீர்மானமாவது :-

"கடன் எடுத்த பாணந்துறை தேச சேவா மாவத்தை இலக்கம் 13 என்ற பதிவு விலாசத்தில் அமைந்துள்ள மக் குண சேகர கிரியேசன்ஸ் (பிறைவேட்) லமிட்டெட் மற்றும் காணியை ஈடுவைத்த யோன் மரினா சியமன்ஏவடீக மங்கலிகா குணசேகர கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். எம். என். பி. ஈண்கெந்த 2011.09.16 ஆந் திகதியுடைய முறிவு இலக்கம் 38 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில தவறுகை புரிந்துள்ளதாகவும், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பீஎல்சீக்கு 2013.05.30 வரை ரூபா இரண்டு கோடியே நாற்பத்தாறு இலட்சத்து எண்பத்துமூவாயி ரத்து நூற்று எழுபது ரூபா முப்பத்தாறு சதம் (ரூ. 2,46,83,170.36) தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் படி மேற்படி முறி இலக்கம் 38 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 2,46,83,170.36 வுடன் 2013.05.31 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 2,17,50,000 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு 17% சத வட்டியுடனும் விளம்பரச் செலவுகள், வேறு கொடுப்பனவுகள் சேர்த்து (பணம் செலுத்தியிருப்பின் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதி,

இல. 182, 3 ஆவது மாடியில் திரிவின்கா சேனநாயக்க ஏலதாரர்களின் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''.

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தல்பிட்டி தெபத்த பாணந்துறை தொட்டமுன பாணந்துறை நகர சபை எல்லையில் பட்டிய கிராமத்தில் கட்டிட இலக்கங்கள் 05 (புதிய இலக்கங்கள் 11D மற்றும் 11/ D/ 1) தேசவெ மாவத்தையில் நிலஅளவையாளர் பி. எல். டி. பெர்னாந்து 1988.09.21 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2699 இல் காண்பிக்கப்பட்ட கல்கந்தவத்த காணியின் எல்லைகள் - வடக்கு : வரைபட இலக்கம் 2699 இல் லொட் 2 தேச பெர ரோட் மற்றும் கல்கண்தவத்த ; கிழக்கு: கல்கண்தவத்த (ரண்கொத் வியாபார காணி) ; தெற்கு : இக் காணியின் ஒரு பகுதி (முன்பு எட்வின் பீரிஸ் காணி ), தற்சமயம்ரண்கொத் வியாபார காணி ; மேற்கு : யு. எம். டி. சில்வா 1964.06.21 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 790 லொட் B மற்றும் C மற்றும் லொட் 3 மற்றும் மேற்படி வரைபட இலக்கம் 2699. இக் காணியின் விஸ்தீரணம் (0ஏ. 1றூ. 4.7பே.) மேற்படி வரைபட இலக்கம் 2699 இக் காணி பாணந்துறை காணிப் பதிவகத்தில் F537/94 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(திருமதி) ஆர். கே. துணுவில,
கம்பனிச் செயலாளர்.

7-78

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0209 5000 1888 - எம். ஏ. எஸ். பிரியந்த

2014, ஏப்பிறல் 30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் : -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தை ஏற்ற கொழும்பு 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் தமது பதிவு அலுவலகத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக காலி பிரசித்த நொத்தாரிசுவான கே. எஸ். என். டி சில்வா என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, நவெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 842, 2012, திசெம்பர் 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 878 மற்றும் 2013, யூன் 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 1076 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டவர் என்ற வகையில் கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மனமால ஆரச்சிகே சுதத் பிரியந்த என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இலக்கங்கள் 842, 878 மற்றும் 1076 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் எண்பது இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து தொளாயிரத்து அறுபத்திரண்டு ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 80,29,962.13) 2014, மார்ச் 14 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட எண்பது இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து தொளாயிரத்து அறுபத்திரண்டு ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 80,29,962.13) 2014, மாச்சு 15 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 842, 878 மற்றும் 1076 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையை செலுத்தித் தீர்க்கும் திகதி வரை அறுபது இலட்சம் ரூபா (ரூ. 60,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்தொன்பது தசம் ஐந்து வீதம் (19.5%)மேலும் பதின்நான்கு இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து முப்பது ரூபா எழுபத்தாறு சதம் (ரூ. 14,72,030.76) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதினெட்டு தசம் ஐந்து (ரூ. 18.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டுமுறி இலக்கங்கள் 842, 878 மற்றும் 1076 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோரளே வெலிகம பரனகடே கிராம சேவகர் பிரிவின் பழைய காலி - மாத்தறை வீதி வரிமதிப்பீட்டு இல. 261 ஐ ஏற்ற ''ஜுல்காஹாவத்த எனும் மரிக்காண்டுகொரட்டுவ வத்த மரதுன் மரிக்கன்கே வத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். எல். ஏ. எம். ஹிஷாம் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, மே 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 322 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு:' மாஹாகெதரவத்த ; கிழக்கு : கணக்குப்பிள்ளை பதின்சிவஹிட்டிய வத்த எனும் கரட்டட் ஹவுல்வத்த மற்றும் பிலின்காஹாகொராட்டுவ; தெற்கு : காலி முதல் மாத்தறை வரையான நெடுஞ்சாலை ; மற்றும் மேற்கு : அதே காணியின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் A ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்து ஆறு தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 26.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 322 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தறை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் P 18/102 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-137

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

*394 (3) ஆம் பிரிவின் கீழான "வோக்வே (பீவீடீ) எல்டீடி" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்*

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2010.10.20 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "வோக்வே (பீவீடீ) எல்டீடி" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற் கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.*

*அவ்வாறு இல்லையெனில் அதற்கான தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது"வோக்வே (பீவீடீ) எல்டீடி" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி (பணிகளை மேற்கொள்ளல்) தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.*

*தூவலகே நிஹால் ரஞ்சன் சிறிவர்தன,*
*(பணிகளை மேற்கொள்ளல்),*
*கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.*

*பீவீ 75025*
*கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,*
*இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2014, யூன் 07.*

*7-51*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| I வது பகுதி : | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2014**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 04.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.06.2014 |
| | | வெள்ளி | 11.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.06.2014 |
| | | வெள்ளி | 18.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.07.2014 |
| | | வெள்ளி | 25.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.07.2014 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 01.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.07.2014 |
| | | வெள்ளி | 08.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.07.2014 |
| | | வெள்ளி | 15.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.08.2014 |
| | | வெள்ளி | 22.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.08.2014 |
| | | வெள்ளி | 29.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.08.2014 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 05.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.08.2014 |
| | | வெள்ளி | 12.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.08.2014 |
| | | வெள்ளி | 19.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.09.2014 |
| | | வெள்ளி | 26.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.09.2014 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.